## கமத்தொழில் அபிவிருத்தி நிதியம் - 2015

---

கமத்தொழில் அபிவிருத்தி நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புகளை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2000 இன் 46 ஆம் இலக்க கமத்தொழில் அபிவிருத்தி அதிகாரச் சட்டத்தின் 97(5) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்படி நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நிமயங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தினால் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உளளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கிறாரேயன்றி அதிகார சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற் கொள்ளவில்லை. முகாமைத்துவதத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கமத்தொழில் அபிவிருத்தி நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் அசைவைக் காண்பிப்பதற்கான கூற்றொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்ட ரூபா 2,447,350 தொகையான மூலதன வடிவிலான செலவினம், ஆண்டின் செலவினமாக வருமானத்திற்கு எதிராகப் பதிவழிக்கப்பட்டிருந்தது.

(ஆ) ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் கணக்குகளில் நடைமுறைப் பொறுப்பாகக் காண்பிக்கப்பட்ட அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்படாத ரூபா 10,746,805 கூட்டுத்தொகையான விசிறும் இயந்திர வைப்புக் கணக்கும் நிலத்தை செப்பனிடும் கருவி சேவை வைப்புக் கணக்கின் மீதியும் மீளாய்வாண்டின் வருமானகமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) நிதியத்திற்குரியதாகக் காணப்பட்ட வெளியீடுகள் மற்றும் வரைபடங்கள் ஆண்டின் இறுதியில் பௌதீக மெய்மையாய்வு செய்யப்படாதிருந்ததுடன் புத்தக மீதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் பிரகாரம் ரூபா 2,320,800 வெளியீட்டுப் புத்தகங்கள் விநியோகித்தல் மற்றும் ஆண்டின் இறுதியில் எஞ்சியிருந்த ரூபா 354,400 பெறுமதியான வரைபடங்கள் மற்றும் பருவ காலக் கூட்டக் கைநூல்கள் கணக்குகளிலிருந்து கைவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியத்தின் காசு மீதிக்கும் திறைசேரி புத்தகங்களின் படியான காசு மீதிக்குமிடையே 2008 ஆம் ஆண்டு தொடக்கம் இருந்துவரும் ரூபா 651,797 ஆன வேறுபாட்டை இனங்கண்டு சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஜப்பானிய யென் நன்கொடை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்த உழவு இயந்திரத்திற்காக மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்ட தவனைப் பணமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட பெறுமதிகளுக்கும் அபிவிருத்திப் பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலைகளின் பெறுமதிகளுக்குமிடையே ரூபா 6,477,732 தொகையான வேறுபாடொன்று அவானிக்கப்பட்டது.

(இ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ஏக்கர் வரி வருமானம் ரூபா 19,712,878 ஆக இருந்த போதிலும் அபிவிருத்திப் பிரிவின் செயல்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் அது ரூபா 13,942,012 ஆனமையால் ரூபா 5,770,866 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

**2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1995 ஆம் ஆண்டின் போது கமத்தொழிற்சேவை நிலையங்கள் மற்றும் விவசாய அமைப்புகளுக்கு வழங்கப்பட்டிருந்த உழவு இயந்திரம் இழுவைப் பெட்டிகள் தொடர்பாக 2015 திசெம்பர் 31 இல் அறவிடப்பட வேண்டிய நிலுவைத் தவணைப் பணம் ரூபா 6,194,575 ஆக இருந்ததுடன் அதனை அறவிடுவதற்கு பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கமத்தொழிற்சேவை நிலையங்களுக்காக செலுத்தப்பட்ட ரூபா 16,650 தொகையான கணக்காய்வுக் கட்டணம் மற்றும் வனாத்தவில்லு பட்டகரோபன ஆய்வுகூடத்தை நிர்மாணிப்பதற்காக 2012 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 543,000 தொகையான முற்பணத்தை அறவிடுவதற்காக ஆக்கபூர்வமான வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

05 மாவட்டங்களில் விவசாய அமைப்பு முகவர்களுக்குப் பயிற்சியளித்தல் மற்றும் கமநல ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சியளிக்கும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 415,676 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் பங்குபற்றியவர்களின் கையொப்ப பதிவேடொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.6 சட்டம், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 371(2) இன் பிரகாரம் 2015 ஆம் ஆண்டின் போது பெறப்பட்டிருந்த ரூபா 538,459 தொகையான முற்பணம் 2016 மார்ச் இறுதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் செயற்பாடுகளின் விளைவு ரூபா 30,368,913 ஆன மிகையாக இருந்ததுடன், இதற்கொப்பான முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 15,096,452 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 15,272,461 ஆன அதிகரிப்பு காணப்பட்டிருந்தது. 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகத் தீர்க்கப்படாதுள்ள ரூபா 10,746,805 தொகையான பொறுப்புக்கள் மீளாய்வாண்டின் வருமானமாகக் கணக்கு வைக்கப்பட்டமையும், ஏக்கர் வரி வருமானம் ரூபா 3,396,556 இனால் அதிகரித்தமையும், பெறுமானத் தேய்வுச் செலவினம் ரூபா 220,000 இனால் குறைவடைந்தமையும் நிதி விளைவின் அதிகரிப்பிற்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியத்தின் பிரதான நோக்கமாக புதிய கமத்தொழில் கொள்கையினை அமுல்படுத்துதல், வழங்கல்களை மேம்படுத்துதலும், அபிவிருத்தி செய்தலும், கமநல சேவை நிலையங்களை நிர்வகித்தலும் அபிவிருத்தி செய்தலும், நிலையங்களின் கட்டிடங்கள், வாகனங்கள் மற்றும் உபகரணங்களைப் பராமரித்தல், உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சியளித்தல் என்பன காணப்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் உள்நாட்டு நெல் உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக ரூபா 1,000,000 ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அந்தச் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவ வினைத்திறனின்மை

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) யப்பான் யென் உதவி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் விவசாய அமைச்சினால் பகிர்ந்தளிக்கப்பட்ட உழவு இயந்திரம் மற்றும் நீர்ப் பம்பிக்கான தவணைப் பண அறவிடல் மிக மந்த நிலையில் காணப்பட்டதுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவைத் தவணைப் பணம் ரூபா 408,794,219 ஆக இருந்தது. இந்த நிலுவைத் தவணைப்பணத்தில் உள்ளடங்கியுள்ள 02 சக்கர உழவு இயந்திரங்கள் 491 மற்றும் 04 சக்கர உழவு இயந்திரங்கள் 440 என்பவைகளுக்காக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முறையே ரூபா 11,663,259 தொகை மற்றும் ரூபா 139,473,690 தொகை 03 வருடங்களுக்கும் 30 வருடங்களுக்கும் இடையிலான காலமாக நிலுவையாக இருந்ததுடன் 2015 ஆம் ஆண்டின் போது எந்தத் தவணைப் பணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010 ஆம் ஆண்டில் 02 மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டிருந்த 54 நீர்ப் பம்பிகளுக்காக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,041,261 தொகை நிலுவையாக இருந்ததுடன் 2015 ஆம் ஆண்டின் போது இந்த நீர்ப்பம்பிகளுக்காக எந்தத் தவணைப்பணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) 2006 ஆம் ஆண்டிற்கு முன்னர் இனங்காணப்பட்டிருந்த ரூபா 450,000 தொகையான இருப்புப் பற்றாக்குறைக்கு பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தரை இனங்கண்டு அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் போது ரூபா 1,180,100 தொகையான நீர்ப்பம்பி தவணைப்பணம் கிடைத்திருந்ததுடன் அதில் ரூபா 500,000 மாத்திரம் அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பெறுப்பும் நல்லாளுகையும்

---

## 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

---

மீளாய்வாண்டின்போது பாதிடப்பட்ட வருமானங்களுக்கும் செலவினங்களுக்கும், உள்ளவாறான வருமானங்களுக்கும் செலவினங்களுக்கும் இடையே குறிப்பிடத்தக்க முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைக்கட்டுப்பாட்டுக் கருவியாக உபயோகிக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**
---------------------------------------------

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது ஆணையாளர் நாயகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு – பாதீடு செய்யப்பட்ட வருமானம் செலவினம் மற்றும் உள்ளபடியான வருமானம் செலவினத்திற்குமிடையிலான முரண்களைக் குறைத்தல்.

(ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம் - இருப்புக்களை சரியாகக் கணக்கீடு செய்தலும் பௌதீகரீதியில் மெய்மையாய்வு செய்தலும்.

(இ) வைப்புக் கணக்குகளைத் தீர்த்தல் - 2008 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற திறைசேரிப் புத்தகங்களின் பிரகாரமான மீதிக்கும் நிதியத்தின் காசு மீதிக்கும் இடையிலான வேறுபாட்டைத் தீர்த்தல்.

(ஈ) கடன் அறவிடல் - 1995 ஆம் ஆண்டு முதல் நிலுவை உழவு இயந்திரக் கடன் தவணைப் பணத்தை அறவிடல்.